# தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிருந்து வாசகம்.37:12-14,

பல்லவி : ஆண்டவரிடமே பேரன்பும் மீட்பும் உள்ளது.,

திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 8:8-11,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 11:1-45)

## திருப்பலி முன்னுரை:

உயிர்ப்புக்குரியவர்களே, உயிரும் உயிர்ப்புமான ஆண்டவரின் பெயரால் இன்றைய திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். இன்று நாம் தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறை சிறப்பிக்கிறோம். நம் ஆண்டவர் உயிர்த்தெழுதலும் வாழ்வுமாய் இருக்கிறார் என்ற உண்மையை உணர இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நண்பரின் இறப்புக்காக, ஆண்டவர் இயேசு கண்ணீர் விட்டு அழுததை இன்றைய நற்செய்தி சுட்டிக் காட்டுகிறது. பாவத்தினால் நாம் கடவுளின் அருள் உயிரை இழக்கும் போதெல்லாம் ஆண்டவர் நமக்காக கண்ணீர் வடிக்கிறார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இறந்த லாசரை, இயேசு மீண்டும் உயிர்த்தெழச் செய்ததையும் நாம் காண்கிறோம். நாம் பாவத்தினால் அருள் வாழ்வில் இறந்தாலும், நம்மை உயிர்ப்பிக்க ஆண்டவர் தயாராக இருக்கிறார் என்பதை உணர அழைக்கப்படுகிறோம். கிறிஸ்து இயேசுவின் வல்லமையால் பாவத்தில் இருந்து உயிர்த்தெழுந்து புது வாழ்வு வாழும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1 உலகில் தோன்றும் ஒவ்வொரு மனிதரையும் ஒளிர்விக்கும் எம் இறைவா!**

எம் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், பொது நிலையினர் ஆகிய அனைவரும் உலகின் ஒளியாம் இறை இயேசுவின் வார்த்தையாலும் உணவாலும் ஊட்டம் பெற்று உமக்கு உகந்தவராகவும், பணிவாழ்வில் உமக்கு உகந்தவற்றையே நாடவும் பிறரை நேர்மையான உள்ளத்தோடு அன்பு செய்து வாழத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை வேண்டுகிறோம்.

**2. வாழ்வளித்து வழிநடத்துபவரே இறைவா,**

உம் மீது நம்பிக்கை இல்லாமலும், உம்மைப் பற்றிய தவறான எண்ணங்களாலும், ஆன்மீக வாழ்வில் இறந்தவர்களாய் வாழும் மக்களிடையே விசுவாசத்தின் ஒளியை ஏற்ற உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**3. கல்லறையைத் திறப்பவரே இறைவா,**

உண்மை கடவுளாகிய உம்மைப் புறக்கணித்து நடைபிணங்களாய் வாழும் எம் நாட்டு மக்கள் அனைவரும், தங்கள் மீது கட்டி எழுப்பியுள்ள கல்லறைகளில் இருந்து வெளியேறி உமது மாட்சியைக் காண உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**4. ஆவியைப் பொழிபவரே இறைவா,**

சிந்தனை, சொல், செயல் அனைத்தாலும் பாவங்கள் செய்து, உமது அருளுயிரை இழந்து தவிக்கும் மக்கள் அனைவருக்கும் உமது தூய ஆவியால் புத்துயிர் அளித்து உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**5. எளியவர்க்கு இரங்கும் இறைவா!**

எங்கள் இடுக்கண்களையும் பலவீனங்களையும் நீ நன்கு அறிவீர். நாங்கள் எவ்வளவுக்கு வலுவற்றவர்களாக இருக்கின்றோமோ அவ்வளவுக்கு நீர் உறுதுணை தந்து எங்களை வலுப்படுத்துகிறீர். உமது கொடையாக நாங்கள் பெற்றுள்ள இந்த ஒப்புரவுக் காலத்தை நன்றியுடன் பயன்படுத்தி எங்கள் வாழ்வைப் புதுப்பிக்க வேண்டிய வரம் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.